# 19 ஆவது அரசியலமைப்பிற்கான திருத்தங்களோடு மேம்படுத்தப்பட்ட பிரஜைகளின் சுதந்திரம்


பதிப்பாசிரியர்:

**எஸ்.ஜீ. புஞ்சிஹேவா**

தமிழில்:

**எஸ். சிவகுருநாதன்**



CPA

Centre for Policy Alternatives

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

## 19 ஆவது அரசியலமைப்பிற்கான திருத்தங்களோடு மேம்படுத்தப்பட்ட பிரஜைகளின் சுதந்திரம்

- எமது வாழ்க்கையின் பொருளாதார, சமூக, அரசியல் ஆகிய பல்வேறு நடவடிக்கைகளை நிர்வகிப்பது அரசியலமைப்பாகும். இந்த ஆட்சி, நாம் தெரிவுசெய்யும் ஆட்சியாளர்களுக்கு அமைய, அது நல்லாட்சியாகவோ அல்லது நச்சுத்தன்மையான ஆட்சியாகவோ அமையலாம்.
- 1978ல் இருந்து 2015 வரை எமது அரசியலமைப்பில் 18 திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டபோது எமது அதிருப்தி அதிகரித்தது. அன்று முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட 05 ஜனாதிபதிகளில் 04 ஜனாதிபதிகள் ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து பிரஜைகளின் சுதந்திரத்திற்கு மட்டுப்பாடு விதித்தனர்.
- 1978 இல் இருந்து அதிகரித்துக் கொள்ளப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் அரசியலமைப்பிற்கான 19ஆவது திருத்தத்தின்மூலம் கைவிடப்பட்டது. இவ்வாறாக, ஒரு குறிப்பிட்ட பதவிக்கு இருக்கும் அதிகாரங்கள் கைவிடும் நிலை மிக அபூர்வமாகவே இடம்பெறுகிறது.
- இவ்வாறு அதிகாரத்தைக் கைவிடுவதனால் பிரஜையின் சுதந்திரம் விரிவாக்கப்படுகிறது. அவ்வாறு விரிவடைந்தது எவ்வாறு என ஆராய்ந்து பார்ப்போம்.

# ஜனாதிபதி அதிகாரங்களும் அதன் பாதகமான பெறுபேறுகளும்

- 1978 அரசியலமைப்பு மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டன. 1980இல் இடம்பெற்ற பொதுவேலை நிறுத்தத்தையும், தொழிற்சங்கங்களையும் அடக்கியொடுக்குவதற்கு, அது முதலில் தான்தோன்றித்தனமாக, பயன்படுத்தப்பட்டது.
- 1983 கறுப்பு யூலையையும், யுத்தத்தையும் ஆரம்பிப்பதற்கு இந்த நிறைவேற்று அதிகாரம் பயன்படுத்தப்பட்டது.
- இந்தியாவுடன் இலங்கை ஓர் உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டு 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாணசபைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால், ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பயன்படுத்தி அந்த ஒப்பந்தம் அமுலாக்கப்படவில்லை.
- 19ஆவது திருத்தத்தின்கீழ் மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் அதேமுறையில் அமுல்படுத்தப்பட முடியாது. ஏனெனில், தனி விருப்பத்திற்குத் தீர்மானங்களை மேற்கொள்ளாமல் பாராளுமன்றத்தின் இடையீட்டுடன் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.
- 1978 அரசியலமைப்பை விட 2000 இல் நல்லதொரு அரசியலமைப்பு சமர்ப்பிக்கப்பட்டது. முதிர்ச்சியடையாத அரசியல் காரணமாக அது தோல்வி கண்டது. அத்தோடு ஜனாதிபதி அம்மையார் முறையற்ற வகையில் அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.
- ஜனாதிபதியின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட வேண்டுமென, பரந்துபட்ட மக்களின் அபிப்பிராயம் ஏற்பட்டதன் விளைவாக, 17ஆவது திருத்தம் அங்கீகரிக்கப்பட்டது. அத் திருத்தத்தின் குறைபாடுகள் காரணமாக, ஜனாதிபதியின் அதிகாரங்களினால், அரசியலமைப்புக்கூட கீழ்நிலைக்குத்தள்ளப்பட்டது.
- தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படாமைமூலம் 17ஆவது திருத்தம் முதல்முறையாக மீறப்பட்டது.

- முன்னைநாள் ஜனாதிபதி அம்மையாரின் இரண்டு பதவிக்காலங்கள் முற்றுபெற்ற பின்பு புதிய ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

## ஜனாதிபதி மகிந்த 17வது திருத்தத்தை மீறினார்

- அரசியலமைப்பு பேரவையை நியமிக்காமையால் ஆணைக்குழுக்களும் உருவாக்கப்படவில்லை.
- ஜனாதிபதி தான் விரும்பியோரை ஆணைக்குழுக்களுக்கு நியமித்தார். அதன்மூலம் 17ஆவது, 13ஆவது திருத்தங்கள் மீறப்பட்டன.

- பொதுமக்கள் தேர்தல்மூலம் வழங்கிய அதிகாரத்தை பொதுமக்களின் நன்மைக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் இவ் அதிகாரம் (நல்லாட்சி) குழுக்கள்மூலம் அமுல்படுத்தப்படுகிறது.
- இவற்றில் இரண்டு குழுக்களான அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (ஊமீநு) மற்றும் அரசாங்கக் கணக்குகள் (ஊமீயு) மிக முக்கியமானவை. அரச நிறுவனங்களின் ஊழல், மோசடி, வீண்விரயம் என்பன நிகழ்ந்துள்ளதா? என்பதை இத்தெரிவுக் குழுக்கள் கண்டறியும். ஆனால், ஊழலும், வீண்விரயமும் உண்டென கண்டறியப்பட்டாலும் அவை மூடிமறைக்கப்பட்டன. பின்னர் மேற்படி செயற்குழு உறுப்பினர்களாகத் தாம் விரும்பிய நபர்களே நியமிக்கப்பட்டு, தெரிவுக் குழுக்கள் பலவீனப்படுத்தப்பட்டன.

19ஆவது திருத்தத்தின் பின்னர் இக்குழுக்கள் உரியமுறையில் நியமனம் பெறுவதற்கு வழிசமைக்கப்பட்டது. இவற்றின்மூலம், கண்டறியப்படும் விடயங்கள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய காரணத்தினால், ஊழல்களை மூடிமறைக்க முடியாது. எனவே, பல கோடிக்கணக்கான பிரஜைகளுக்கு உரிய நிதி அவர்களின் நன்மைக்காகவே பயன்படுத்தப்படும்.

## நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிப் பதவி

- ஜனாதிபதிமார் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்துவதினால் அவர்கள் பலவற்றைப் பெற்றார்கள் என்பதில் எதுவித சந்தேகமும் கிடையாது. ஆனால், மக்களுக்கு இருந்த ஜனநாயக உரிமைகள் இல்லாதொழிக்கப்பட்டமையால் பல விடயங்கள் நிகழ்ந்தன.
- எனவே நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழிக்க வேண்டுமென்ற மக்களின் அபிப்பிராயம் நீண்டகாலமாக கட்டியெழுப்பப்பட்டது. இதைத் தடுப்பதற்காக 18ஆவது திருத்தம் பலவந்தமாக திணிக்கப்பட்டது. அரசியல் அதிகாரத்தின்மூலம் நீதிமன்றங்களும் தரமிறக்கப்பட்டன. தனக்குத் தேவையான நீதிமன்றத் தீர்ப்புக்கள் பலவந்தமாகப் பெறப்பட்டு அது நீதியான தீர்மானமாக மேலோட்டமாகக் காட்டப்பட்டது.
- 17ஆவது திருத்தத்தின்மூலம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை மட்டுப்படுத்துவதற்கு ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. மேற்படி ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிப்பதற்கு அரசியலமைப்புப் பேரவை ஒன்று பிரேரிக்கப்பட்டது.
- அரசியலமைப்புப் பேரவையில் பத்து உறுப்பினர்கள் உள்ளடங்குவர். ஐந்து பேர் அரசியல்வாதிகள். ஏனைய ஐந்து பேர் அரசியல் கட்சிகளைச் சாராத ஐந்து கல்வியியலாளர்களாவர். இந்த அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைகளின்றி ஆணைக்குழுக்களுக்கு எந்தவொரு உறுப்பினரையும் நியமனம் செய்ய முடியாது.
- ஆனால், அரசியலமைப்புப் பேரவையை உரிய முறையில் நியமிக்காமல், அனைத்து நியமனங்களையும் ஜனாதிபதி தன் கையில் எடுத்தார். அனைத்து நியமனங்களையும் தனது இஷ்டப்படியே செய்தார்.

## அபகீர்த்திமிகு 18ஆவது திருத்தம்

- அரசாங்கத்தின் அனைத்து அதிகாரங்களும், தீர்மானங்கள் மேற்கொள்ளும் அழுத்தங்களும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் சட்டமாகும். பாராளுமன்றத்தின் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் ஜனாதிபதியே தம்வசப்படுத்திக் கொண்டார். அதற்கமைய சுயாதீனமான ஆணைக்குழுக்கள் இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக பொம்மலாட்ட சபைகள் உருவாக்கப்பட்டன. நீதிமன்றமும் பொலிசும் ஜனாதிபதியின் தேவைகளுக்கேற்ப செயற்பட்டன.
- ஜனாதிபதி, முன்னால் தேசாதிபதியினதும், பிரதமரினதும் அதிகாரங்களைப் பயன்படுத்தினார். ஜனனாதிபதி அமைச்சரவையின் பிரதானி ஆவார். பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், இராணுவத் தளபதிகள் ஆகிய அனைவரையும் ஜனாதிபதியே நியமித்தார். அதேசமயம் பாதுகாப்பு அமைச்சுப் பதவியையும், நிதியமைச்சுப் பதவியையும் அவரே வைத்துக்கொண்டார். முதலீட்டுச் சபை, தென்னிலங்கை அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலைகள், துறைமுகம், மின் உற்பத்தி நிலையங்கள் ஆகிய அனைத்தும் எதுவித சட்டமுமில்லாமல் ஜனாதிபதி தன்வசமே வைத்துக்கொண்டார்.

## இந்நிலைமையில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்பும் கட்டாய அவசியம் ஏற்பட்டது. 19ஆவது திருத்தம் அந்த அவசியத்தைப் பூர்த்தி செய்கிறது.

- 18ஆவது திருத்தத்தின் சகல அதிகாரங்களையும் தம்வசப்படுத்திக் கொள்வதன்மூலம் “அரசு நானே” என்ற கருத்தே பிரதிபலித்தது. 19ஆவது திருத்தத்தின்மூலம் “அரசு என்பது மக்களே” எனக் கருதப்பட்டது. ஆனால், அது முழுமையாக நிறைவேறவில்லை.
- ஜனாதிபதிப் பதவியை ஒருவர் இரண்டு தடவைகள் மாத்திரமே வகிக்க முடியும் என்ற நிலைப்பாடே ஆரம்பத்தில் இருந்தது. 18ஆவது திருத்தத்தின் மூலம் இந்த மட்டுப்பாடு நீக்கப்பட்டமையால் தான் விரும்பிய காலம்வரை ஜனாதிபதிப் பதவியை வகிக்க முடியும் என்று திருத்தப்பட்டது. 19ஆவது திருத்தத்தின்மூலம் மீண்டும் ஜனாதிபதி பதவி இரு தவணைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது.

- முன்னர் ஒரு தவணை என்பது ஆறு ஆண்டுகளாகும். 19ஆவது திருத்தத்தின்மூலம் அது மேலும் மட்டுப்படுத்தப்பட்டு பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளென வரையறுக்கப்பட்டது. அதேசமயம் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடக்கூடிய ஆகக் குறைந்த வயது 30இல் இருந்து 35 வரை உயர்த்தப்பட்டது.

- முன்னைய இரண்டு ஜனாதிபதிகளும் உரியமுறையில் அரசியலமைப்புப் பேரவையை நியமிக்கவில்லை. ஆனால், இம்முறை மேற்படி பேரவை அமுலாக்கப்பட்டது. அரசாங்கத்தின் உயர் பதவிகளுக்கு சுயாதீனமான ஆணைக்குழு உறுப்பினர்களை அரசியலமைப்புப் பேரவையே பரிந்துரை செய்யும். அதன்மூலம் ஜனாதிபதி தான்தோன்றித்தனமாக அரசியலமைப்பு பேரவைக்கு உறுப்பினர்களை நியமிக்க முடியாது.

ஆனால், இந்த அரசியலமைப்பு பேரவைக்கு சிவில் சமூகத்தில் இருந்து ஐந்து கல்வியியலாளர்கள் நியமிக்க வேண்டுமென்ற யோசனையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அழுத்தம் காரணமாக 3 பேருக்கு குறைக்கப்பட்டது. எவ்வாறாயினும் முன்னர் ஜனாதிபதி தான்தோன்றித்தனமாக மேற்கொண்ட நியமனங்கள் தற்போது அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைய செய்யப்படுகிறது.

இது மிக முக்கியமான ஜனநாயக நடவடிக்கையாகும். முன்னர் 7 ஆணைக்குழுக்கள் இருந்தன. தற்போது 9 ஆணைக்குழுக்களாக அதிகரிக்கப்பட்டன. மேற்படி ஆணைக்குழுக்கள் பின்வருமாறு

- தேர்தல் ஆணைக்குழு
- அரச சேவை ஆணைக்குழு
- தேசிய பொலிஸ் ஆணைக்குழு
- மனித உரிமைகள் ஆணைக்குழு
- இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு
- நிதி ஆணைக்குழு
- எல்லை நிர்ணய ஆணைக்குழு
- கணக்குச் சேவை ஆணைக்குழு
- தேசிய பெறுகை (விலைமனுகோரல்) ஆணைக்குழு

மேலே குறிப்பிடப்பட்ட ஆணைக்குழுக்கள் தற்போது சுயாதீனமானவை. முன்னர் ஜனாதிபதியின் கீழ் அவை இயங்கின.

முன்னர் இடம்பெற்ற ஒருசில செய்யத்தகாத நடவடி க்கைகள் பின்வருமாறு: ஆனால், தற்போது அவ்வாறு இடம்பெறவில்லை.

- முன்னர் ஜனாதிபதியே நேரடியாக சட்டமா அதிபரை நியமித்தார். எனவே, கொலைக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட சில நபர்களின் வழக்குகள் வாபஸ்பெறப்பட்டன.

- முன்னர் பொலிஸ் மாஅதிபரை ஜனாதிபதியே நேரடியாக நியமித்தார். எனவே, கொலைகள், ஊழல்கள் மற்றும் குற்றவியல் குற்றங்கள் என்பவற்றை மேற்கொண்ட சில அரசியல் அனுதாபிகள் மேலிடத்தில் இருந்து அங்கீகாரம் பெற்ற பின்பே கைது செய்யப்பட்டனர். 19ஆவது திருத்தத்திற்குப் பின்னர் அவ்வாறு இடம்பெறவில்லை.

- அன்று அரசாங்கத்தின் சகபாடிகளுக்கு எதிராக இலஞ்சம் ஊழல்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் மீது 18ஆவது திருத்தத்தின்கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்படவில்லை. 19இன் கீழ் அவ்வாறு செய்வதற்கான கால அவகாசம் இல்லை.

- 18ஆவது திருத்தத்திற்கு அமைய டென்ரர், கொந்தராத்துக்கள் தான்தோன்றித்தனமாக வழங்கப்பட்டன. 19ஆவது திருத்தத்திற்குப் பின்னர் ஒட்டுமொத்த விலைமனுகோரல் நடைமுறை சுயாதீன ஆணைக்குழுக்களினால் மேற்கொள்ளப்படுகிறது. இதன்மூலம் பாரிய களவுகள், மோசடிகள் என்பவற்றைத் தடுப்பதன்மூலம் பொதுமக்களின் நிதி பொதுமக்களின் சார்பில் மிச்சப்படுத்த முடிந்தது.

- தேசிய பெறுகை மற்றும் தேசிய கணக்குச் சேவை என்ற இரண்டு புதிய சுயாதீன ஆணைக்குழுக்கள் காரணமாக பொதுமக்களின் பணம் வீண்விரயமாக்கப்படுவதும், ஊழல்களும் தடுக்கப்படும். முன்னர் கணக்காய்வாளர் நாயகம் என்ற பதவி ஜனாதிபதியின் நியமனமாகும். எனவே, ஊழல்கள் இருந்த இடங்களில் கணக்காய்வுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது அதற்கு ஜனாதிபதியினதோ அல்லது அமைச்சர்களினதோ தலையீடு இல்லாதபடியால் சுதந்திரமாக செயற்பட முடியும்.

- பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் இடம்பெற்று ஓராண்டிற்குப் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் 19ஆவது திருத்தத்தின் மூலம் மட்டுப்படுத்தப்பட்டது. தற்போது அவ்வாறு பாராளுமன்றம் கூடி 4 1/2 ஆண்டுகளின் பின்னரே பாராளுமன்றம் கலைக்கப்பட முடியும். ஆனால், பாராளுமன்றத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஓர் பிரேரணையை அங்கீகரிப்பார்களேயாயின் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும்.
- அமைச்சுப் பதவிகளின் எண்ணிக்கைகளை 30 ஆக மட்டுப்படுத்த வேண்டுமெனவும், ,அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களின் எண்ணிக்கையை 40 ஆக மட்டுப்படுத்த வேண்டுமெனவும் 19ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு மாற்றம் ஏற்படுத்தப்பட்டாலும் சில மட்டுப்பாடுகளும் உண்டு.
- முன்னர் சில சட்டங்களை, அவசர அவசரமாக, இரண்டு மூன்று நாட்களில் பாராளுமன்றம் அங்கீகரித்தது. தற்போது பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குவதற்கு 14 நாட்களுக்கு முன்னர் பகிரங்கப்படுத்த வேண்டுமெனக் கூறப்படுகிறது.
- ஒரு போட்டியின் மூலம், ஜனாதிபதிப் பதவிக்கு ஒருவர் நியமிக்கப்பட்ட பின்னர், இரண்டு வாரங்களுக்குள் பதவியை ஏற்க வேண்டும். நல்ல நேரம், சாத்திரம் என்பவற்றைப் பார்த்து காலம் கடத்த சட்டத்தில் இடமில்லை. அதன்போது எஞ்சிய பதவிக்காலம் இரத்தாகிவிடும். ஜனாதிபதி பதவிக்கான தேர்தல், தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைகள் மற்றும் நியமங்களுக்கு ஏற்ப இடம்பெறும்.
- ஜனாதிபதியின் நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் கேள்விக்குட்படுத்த முடியும். முன்னர் அவ்வாறு ஜனாதிபதியின் நடவடிக்கைகளை கேள்விக்கு உட்படுத்த முடியாது.
- ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று முன்னர் இருந்த அரசியலமைப்புச்சட்டத்தில் ஒரு மாற்றம் கொண்டுவரப்பட்டு அடிப்படை மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியும் என அரசியலமைப்பு திருத்தப்பட்டது.

- தற்போது அமைச்சர், பிரதி அமைச்சர், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர் பதவிகளை மாத்திரமே ஜனாதிபதி நியமிக்க முடியும். மேற்பார்வை அமைச்சர், கருத்திட்ட அமைச்சர் ஆகிய அமைச்சுப் பதவிகள் இல்லாதொழிக்கப்பட்டன.
- இலஞ்ச ஊழல்கள் விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு இன்றியும் தமது விருப்பத்தின் பேரில் விசாரணைகளை ஆரம்பிக்க முடியும்.
- தகவல்களைப் பெறுவது அடிப்படை உரிமையாக அரசியலமைப்பு ஏற்றுக்கொள்கிறது.
- முன்னர் சமுர்தி, திவிநெகும (வாழ்வின் எழுச்சி) ஆகிய நிறுவனங்களின் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தின் மேற்பார்வைக்கு எடுக்கப்படவில்லை. தற்போது கணக்காய்வு ஆணைக்குழுவின் கீழ் மேற்பார்வை செய்யப்படாத எந்தவொரு அரச நிறுவனமும் கிடையாது

19 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் இல்லாதொழிக்கப்படும் என்றே முன்னர் கூறப்பட்டது. அது எவ்வளவு தூரம் இடம்பெற்றுள்ளதென மேற்கூறிய விடயங்களோடு ஒப்புநோக்கிப் பாருங்கள்.

தற்போதைய ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திய ஒரு சில சந்தர்ப்பங்கள் உண்டு. அதாவது திரு.ரணில் விக்கிரமசிங்க அவர்களை பிரதமராக நியமித்தல், முன்னைநாள் பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்து தற்போதைய பிரதம நீதியரசரை நியமித்தல், மிகவும் நியாயமற்ற முறையில் சேவையில் இருந்து நீக்கப்பட்ட முன்னால் இராணுவ தளபதி திரு.சரத் பொன்சேக்காவை மீள சேவையில் நியமித்தல், முன்னைநாள் பிரதம நீதியரசர் திருமதி சிராணி பண்டாரநாயக்காவை மீள சேவையில் நியமித்தல்.

தொடர்ந்தும் எஞ்சி உள்ள சில குறைபாடுகளை பிரஜைகளின் இடையீடு மூலம் நிவர்த்தி செய்ய வேண்டும்.

# இலங்கையின் சுயாதீன ஆணைக்குழுக்கள்

| சுயாதீன ஆணைக்குழு | ஆணைக்குழு உறுப்பினர்கள் | முகவரி | தொடர்பாடல் தகவல்கள் |
|---|---|---|---|
| **இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு** | கலாநிதி தீப்பிகா உடகம (தவிசாளர்)<br>திரு.ஹமீட் சசாலி உசேன்,<br>திரு.சாலிய கே.எம்.பீரிஸ்<br>திருமதி அம்பிகா சற்குணநாதன் | இல.165, கிங்சி வீதி, பொரளை, கொழும்பு 08. | 2685980<br>2685981<br>2696470<br>2689558<br>2677201<br>sechrc@sltnet.lk |
| **தேசிய பொலிஸ் ஆணைக்குழு** | பேராசிரியர் சிறி ஹெட்டிகே (தவிசாளர்)<br>திரு.பி.எச்.மனதுங்க<br>திருமதி சாவித்திரி விஜயசேகர<br>திரு.வை.எல்.எம்.சவாஹிர்<br>திரு.அன்ரன் ஜெயநாதன் | இல.80, பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டப தொகுதி, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07. | 0115107727<br>0112683307<br>0115107721<br>0115107722<br>0112683308<br>0112683307<br>Complaints@npc.gov.lk |
| **அரச சேவைகள் ஆணைக்குழு** | திரு.தர்மசேன திசாநாயக்க (தவிசாளர்)<br>திரு.சலாம் அப்துல் வேட்<br>செல்வி டி.சிரந்தா விஜயதிலக<br>கலாநிதி பிரதாப் ராமானுஜம்<br>திருமதி வீ.ஜெகராஜசிங்கம்<br>திரு. ஸ்டன்லி நிஹால் செனெவிரத்ன<br>திரு.எஸ்.ரனுகே<br>திரு.டி.எல்.மெண்டிஸ்<br>திரு.சரத் ஜயதிலக | இல.177, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05. | 0112136600<br>0112136650<br>0112136700<br>0112136602<br>0112136604<br>0112136603<br>Info@psc.cov.lk<br>Sec.psc@sltnet.lk |
| **இலஞ்சம் அல்லது ஊழல் குற்றஞ்சார்த்துதல் விசாரணை ஆணைக்குழு** | நீதியரசர் டைட்டஸ் போதிபால (தவிசாளர்)<br>நீதியரசர் டபிள்யூ.லால் ரஞ்சித் சில்வா<br>திரு.சந்திரநாத் நெவில் குருகே<br>திருமதி தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க(பணிப்பாளர நாயகம்) | இல.36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 | 0112559923<br>0112596360<br>0112586257<br>0112595039<br>0112595040<br>0112586851<br>ciaboc@eureka.lk<br>ccy@sltnet.lk |

| சுயாதீன ஆணைக்குழு | ஆணைக்குழு உறுப்பினர்கள் | முகவரி | தொடர்பாடல் தகவல்கள் |
|---|---|---|---|
| **தேர்தல் ஆணைக்குழு** | திரு.மகிந்த தேசப்பிரிய (தவிசாளர்)<br>திரு.என்.ஜி.அபேசேகர<br>பேராசிரியர் ரத்னஜீவன் கூல் | த..பெ.இல.02, சரண மாவத்தை, இராஜகிரிய. | 0112868441<br>0112868442<br>0112868443<br>0112868444<br>0112868426<br><br>comelesl@sltnet.lk |
| **தேசிய பெறுகை ஆணைக்குழு** | திரு.ஏ.எம்.பொன்சேகா (தவிசாளர்)<br>திரு.டி.என்.ஐ.எவ்.ஏ.விக்கிரமசூரிய<br>திரு.பி.ஈ.ஆர்.சீ.வெடிக்கால்<br>திரு.பீ.ஏ.டி.சீ.ஆர்.பெரேரா<br>திரு.நியாத் வகுதேவன் | தேசிய பெறுகை முகவர் நிறுவனம், பொதுச் செயலகக் கட்டடம், கொழும்பு 01 | 0112484600<br>0112484700 |
| **எல்லை நிர்ணய ஆணைக்குழு** | திரு.பஞ்சலிங்கம் கனகரத்னம் (தவிசாளர்)<br>கலாநிதி அனில் - பண்டாரநாயக்க<br>பேராசிரியர் சாகுல் ஹமீட் இஸ்புல்லா | அரசியலமைப்பு பேரவை, இலங்கைப் பாராளுமன்றம் (நிரந்தர இருப்பிடம் இதுவரை ஒதுக்கப்படவில்லை) | 0112777227<br>0112777100 |
| **கணக்குச் சேவைகள் ஆணைக்குழு** | திரு.எம்.காமினி விஜேசிங்க (தவிசாளர்)<br>திரு.நிஹால் சுனில் ராஜபக்ஷ<br>திரு.இலங்ககோன் காமினி அபேரத்ன<br>திரு.வேலுப்பிள்ளை கந்தசாமி<br>திரு.சோமபால பெரேரா | கணக்காய்வாளர் திணைக்களம், 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை. | 0112887028<br>0112887034<br><br>oaggov@sltnet.lk |

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

| | | |
|---|---|---|
| முகவரி | : | 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு 05. |
| தொலைபேசி | : | 011 2370803 / 4 |
| ஃபக்ஸ் | : | 011 2370801 / 2 |
| இணையதளம் | : | www.cpalanka.org |
| மின்னஞ்சல் | : | info@cpalanka.org |